Registered as a NewsPaper  பக்கங்கள் 06  விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  சித்திரை 18 ( 30 - 04 - 1992 )  வியாழக்கிழமை  ஓசை: 72

## தடை செய்யப்பட்ட மருந்து கடைகளில் விற்பனை

தடை செய்யப்பட்ட மருந்து வகைகள் ஆங்கில மருந்துக் கடைகளில் விற்பனை செய்யப்படுவது குறித்து மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். மிகவும் பயங்கரமான எதிர்விளைவுகளைத் தரக் கூடிய இமோடியம், லிமோட்டல் மற்றும் பூட்டோகோல்டின் போன்ற தடை செய் யப்பட்ட மருந்து வகைகளைத் தாராளமாக மருந்துக் கடைகளில் பெறக் கூடியதாக இருக்கிறது என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (6ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் வன்முறை சம்பவங்கள்

# 55 முஸ்லிம்கள் 20 தமிழர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற இரு வன்முறை சம்பவங்களில் 55 முஸ்லிம்களும் 20 தமிழர்களும் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.பி.சி. நேற்றிரவு அறிவித்தது.

சில தினங்களுக்கு முன்னர் வாழைச்சேனைப் பகுதியில் இரு தமிழ் இளைஞர்கள் முஸ்லிம் ஊர்காவற் படையால் உயிருடன் புதைக்கப்பட்ட கோரச் சம்பவத்தைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிம் இனத்தவர் மத்தியில் கொந்தளிப்பான நிலைமை உருவாகியிருந்தது.

இதனைத் தொடர்ந்து நேற்று நள்ளிரவு மட்டக்களப்பு மாவட்டத்தில் வெலிகந்தைக்கு அண்மையிலுள்ள முஸ்லிம் கிராமம் ஒன்று ஆயுதம் தாங்கிய நபர்களால் தாக்கப்பட்டதென்றும், இத் தாக்குதலில் 55 முஸ்லிம்கள் கொல்லபபட்டதாகவும் 38க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அருகிலுள்ள தமிழ்க்கிராமம் ஒன்று முஸ்லிம்களால் தாக்கப் பட்டதாகவும் இதில் குறைந்தது 20 தமிழர்கள் கொல்லப் பட்டதாகவும் தெரிகிறது. ஆயினும் உயிரிழந்த தமிழரின் தொகை மேலும் அதிக [6 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பு ஆற்றில் இளம் பெண்ணின் சடலம்

மட்டக்களப்பில் இராணுவ முகாமிற்கு அருகே இருந்த ஆறு ஒன்றில் தமிழ்ப்பெண் ஒருவரின் சடலம் கரைஒதுங்கியுள்ளது வவுணதீவு இராணுவ முகாமிற்கு சமீபமாகச் செல்லும் இவ் ஆற்றில் கடந்த இருபத்து நான்காம். திகதி சடலம் கரைஒதுங்கியபோதும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத்தெரியவருகின்றது.

மட்டக்களப்பில் அண்மைக் காலத்தில் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்படும் தமிழ் மக்கள் சடலங்களாக ஆங்காங்கே வீசப்படும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

## இலங்கையின் எப்பகுதிக்கும் எவரும் செல்லலாம்

தற்போது நடைமுறையில் இருக்கும் சட்ட திட்டங்களுக்கு அமைய வடக்கு கிழக்கின் எந்தப் பிரதேசங்களுக்கும் தமிழர், சிங்களவர், முஸ்லிம், பேகர் அல்லது எந்த இலங்கையர்களும் செல்லலாம் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு கால் நடையாகச்செல்லஎம்மைஅனுமதித்தால் இந்த யுத்தத்தை நிறுத்த நாம் தயார் என்று சர்வோதய தலைவர் ஏ. பி. ஆரியரத்னா கூறியது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

## நிவாரணம் வழங்கக்கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்துள்ள, அராலிப் பகுதி மக்கள் தமக்கு நிவாரணம் வழங்கக்கோரி நேற்று பதினொரு மணியளவில் யாழ் செயலகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பல மாதங்களாக சொத்துக்களையும் தொழிலையும் இழந்து வேறு இடங்களில் தங்கி உள்ள நூற்றுக்கணக் [6 ஆம் பக்கம் பார்க்க]

# 4 ராணுவ காவலரண்கள் தகர்ப்பு:

# 10 படையினர் பலி; பலர் படுகாயம்

## பொலநறுவையில் புலிகளின் துணிகரத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் ஒன்றின் காவலரண்கள்மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இத் தாக்குதலில் பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்த நிலையில் காவலரணை விட்டு முகாமிற்கு ஓடினர். நான்கு காவலரண்களை புலிகள் அழித்தனர் இத்தாக்குதலின்போது பெருமளவு ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர். ஒரு போராளி வீரமரணமடைந்தார்.

இத் தாக்குதல் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: நேற்று அதிகாலை 12.20 மணியளவில் பொலநறுவை மாவட்டத்தில் அழுங்குப் பொத்தானை என்னுமிடத்திலுள்ள இராணுவத்தினரின் காவலரண்களே புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாகக் கடமையில் ஈடுபட்டிருந்த காவலரண்கள் மீது புலிகள் மேற்கொண்ட [6 ஆம் பக்கம் பார்க்க]

## நவீன ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

அழுங்குப் பொத்தனை இராணுவத்தின் மினி முகாம் மீது நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

★ அல்டி மக்ஸ் இலகு இயந்திரத் துப்பாக்கி -01
★ ரி-56 ரகத் துப்பாக்கிகள் - 09
★ 40 மி.மீ. கைத் துப்பாக்கி - 01
★ வேட்டைத்துப்பாக்கிகள் - 04
★ ரம் ரவைக் கூடுகள் - 02
★ 40 மி. மீ. துப்பாக்கிக்குரிய எறிகணைகள் - 24
★ ரி-56 துப்பாக்கிக்குரிய ரவைக் கூடு - 48
★ 5.56. ரக ரவைகள் - 370
★ நடுத்தர ரவைகள் - 800
★ நேட்டோ ரவைகள் - 50
★ வெளிச்சக் குண்டுகள்- 02
★ ஜே.ஆர்.ரக கிரேனட்டுகள் - 03
★ மோட்டரிலாவோக்கி- 01
★ கூ - 13 சோடி
★ தொப்பி - 08

## வீரச்சாவு 2ஆம் லெப். யோகராசா

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக் [6 ஆம் பக்கம் பார்க்க]

## கட்டுநாயக்காவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையம் பலத்த பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விமான நிலையத்திற்கு வருபவர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனிக்குமாறு விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், பொலிசாரும் கேட்கப்பட்டுள்ளனர் என்றும்,

விடுதலைப் புலிகளின் நீதிமன்ற நீதிபதி என்று சொல்லப்படும் சேகரம் என்பவர் [6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் - இராணுவம் மன்னாரில் கடும் மோதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாக சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையே பலத்த மோதல்கள் இடம் பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்தின் வங்காலை இராணுவ முகாமில் இருந்தும், மாந்தை இராணுவ முகாமிலிருந்தும் கனரக வாகனங்களுடன் புறப்பட்ட இராணுவத்தினரை வழி மறித்தே விடுதலைப் புலிகள் பலத்த தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

கடந்த இரு நாட்களாக [6 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

நாவலர் வீதி, ஆனைப்பந்திச் சந்திக்கும் கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் இடையில் அல்லது அம்பலவாணர் வீதியில் வெள்ளை நிறக் கைப்பை (Purse) ஒன்று தவறிவிட்டது அதற்குள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2511)

கல்வியங்காடு திருநெல்வேலி ஆகிய இடங்களுக்குள் அடையாள அட்டையுடன் டேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பேபி போட்டோ, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி என்னும் விலாசத்திற்கு தயவு செய்து அனுப்பி விடவும். அடையாள அட்டையின் விலாசம், மூத்தையா இராகவதாசன், கள்ளிக்குளம், மாமடு. (2517)

## நிலக்கடலை செய்கை பாதிப்பு

தற்போது நிலவும் வரட்சி காரணமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நிலக்கடலைச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. 1 அந்தர் விதை நிலக்கடலைக்கு விளைச்சலாக சராசரி மூன்று அந்தர் மட்டுமே கிடைத்துள்ளது.


## ஒன்று கூடவும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் அனைவரையும் மருதனார் மடத்தில் உள்ள சர்வோதய வளவில் மே மாதம் 1-ம் திகதி பிற்பகல் 1 மணியளவில் தவறாது ஒன்று கூடுமாறு சீமெந்துப் பொதுத்தொழிலாளர் யூனியன் கேட்டுக்கொள்ளுகிறது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

**30 - 04 - 91 யாழ். நீராவியடியில் எதிர்பாராத விதமாக நடந்த வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த 11 வேங்கைகளின் 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



### லெப்டினனட் அப்பா

(சுந்தரலிங்கம் குமாரகுலசிங்கம்)

தாயின் மடியில் : 14-05-1966 தாயக விடிவில் : 30 04-1991

வீரவேங்கை தேவ ாஸ்லோறன்ஸ்
வீரவேங்கை சுப்பிரமணியம் மதியழகன்
வீரவேங்கை கார்த்திகேசு குமார்
வீரவேங்கை பெரியசாமி நாகேஷ்
வீரவேங்கை பியசேன காமினி
வீரவேங்கை பாலகிருஷ்ணன் சிறீதர்
வீரவேங்கை செலஸ்ரின் ஆனந்தராஜ்
வீரவேங்கை தர்மன் ஸ்ரீபன்
வீரவேங்கை சிவப்பிரகாசம் சிறிகாந்
வீரவேங்கை ஆறுமுகம் சவனேசன்

விடுதலைப் பாதையிலே வீறு கொண்டு
நடந்த வேங்கை இவர்கள்
களமாடி களப்பலியாக வேண்டியவர்கள்
விதியதுவோ சதிகார கும்பலுக்கு
தயாரித்த குண்டது இடைவழியே
எமது இளம் புலிகளைப் பதம்பார்த்துவிட்டது
விடுதலையை எதிர்பார்த்த
வீரத்தின் விளைநிலங்கள் இவர்கள்
இவர்கள் காற்றோடு கரைந்தாலும்
இவர்கள் இலட்சியக் கனவுகள் ஓர்நாள்
நனவாகும்.

உங்கள் பாதசுவடுகளில் எங்கள்
பயணங்கள் தொடரும்.

சகபோராளிகள்

(2518)

## நினைவுகூருகின்றோம்... 1992-04-30

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எம்மைப் பிரிந்த

**சாம்** (பெனிஸ்டஸ் சிறில் - சின்னக்கடை, மன்னார்)

1986 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**சிவகுமார்** (இரத்தினசிங்கம் கேதீஸ்வரன் - 2ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு)

**இலங்கேஸ்** (தம்பிராசா அன்ரன் இராசரத்தினம்- வற்றாப்பளை, முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, வற்றாப்பளைப் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**திலகன்** (நாகராசா கிருஷ்ணானந்தன் - குமுழமுனை, மணலாறு)

**லோகன்** (மு. லோகேஸ்வரன் - குமுழமுனை மணலாறு)

**நிமல்** (தியாகராசா செல்வராசா - சிலாவத்தை, முல்லைத்தீவு)

**ஜெயந்தன்** (பொன்னையா அமிர்தலிங்கம் - வற்றாப்பளை, முல்லைத்தீவு)

**நாகேந்திரம்** [நாகராசா சின்னத்தம்பி - வற்றாப்பளை, முல்லைத்தீவு)

**வில்வன்** (பொ. சிவபாலசுப்பிரமணியராச்சா - முல்லைத்தீவு)

கல்வியங்காட்டில் தேசவிரோதசக்திகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

**அலிஸ்ரன்** (மதுரநாயகம் அலிஸ்ரன் – 'அன்ரனிவாசம்', உடுவில், மானிப்பாய்)

**ரமேஸ்** (ஜெராட் யோகராசா - 'பிறேமா இல்லம்', சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு)

1987 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் காவல் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**சுதா** (பாக்கியநாதர் பவளத்துரை - பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை)

1988 ஆம் ஆண்டு திருக்கோணமலை, பன்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

**லெப். நாதன்** (நடராசா சண்முகம் - பன்குளம், திருக்கோணமலை)

**மோகன்** (வடிவேல் இலங்கேஸ்வரன் - உவர்மலை, திருக்கோணமலை)

மன்னார் உயிலங்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சாள்ஸ்** (குமாரகுலசிங்கம் வேலவன் - மாவிட்டபுரம்)

உயிலங்குளம், மணற்குளம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**ஆனந்தன்**

இதே ஆண்டு தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

★ **சைமன் ஜோதிராஜா** (காரைதீவு, கல்முனை, அம்பாறை)

மட்டக்களப்பில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

★ **ஆனைக்குட்டி** (எச். சி. ரஞ்சித் - காரைதீவு, கல்முனை, அம்பாறை)

1989 ஆம் ஆண்டு திருநெல்வேலி மணல்தறைப் பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கப்டன் வரதப்பா** (சிவரத்தினம் சிறிபாஸ்கரன் – தையிட்டி, காங்கேசன்துறை)

நீர்வேலியில் இந்தியப்படையினருடனான மோதலின்போது தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய

**கப்டன் கண்ணாடிராஜன்** (இராசதுரை ஜெயக்குமார் - நீர்வேலி வடக்கு)

கோண்டாவிலில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**வசந்தன்/சங்கர்** (வசந்தகுமார் - யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவன்

**சின்னத்துரை பிரபாகரன்** (முள்ளியவளை, முல்லைத்தீவு)

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, மகிழவெட்டுவான் கரவெட்டிப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**தீசன்** (ப. யோகராசா - நெடியவெட்டை, மண்டூர், மட்டக்களப்பு)

**குணசீலன்** (கா. கணேசமூர்த்தி - கோயில்போரதீவு, மட்டக்களப்பு)

**ராம்குமார்** (புவனநாதன் - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

**விக்கினேஷ்** (புல்லுமலை, மட்டக்களப்பு)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய

**வல்லவன்** (வைரவப்பெருமாள் பாலசிங்கம் (கல்மடுவீதி, புளியங்குளம், ஓமந்தை, வவுனியா)

யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த

**லெப். அப்பா** (சுந்தரலிங்கம் குமாரகுலசிங்கம் - வேல்வீதி, மயிலிட்டி)

**காமினி** (செல்வம் காமினி - 18, சந்தோசம் வீதி, கொழும்புத்துறை)

**சிவனேசன்** (ஆறுமுகம் சிவனேசன் - மோகனதாஸ் வீதி, கொக்குவில் மேற்கு)

**சிறீகாந்** (சிவப்பிரகாசம் சிறீகாந் – ஆடியபாதம் வீதி, கோணாமலை வீதி, கொக்குவில்

**ஸ்ரீபன்** (அல்வீனப்பர் தர்மன்ஸ்ரீபன் - 13/61 5ஆம் குறுக்குத்தெரு, குருநகர்)

**ஆனந்தராஜ்** (செலஸ்ரீன் ஆனந்தராஜ் - 17/11, சென் ஜேம்ஸ்வீதி, குருநகர்)

**நாகேஷ்** (பெரியசாமி நாகேஷ் - 27/16, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்)

**குமார்** (கார்த்திகேசு குமார் - நாவலர் வீதி, நல்லூர்)

**பபீந்திரன்** (திருநாவுக்கரசு பபீந்திரன் - உரும்பராய் கிழக்கு)

**மதியழகன்** (சுப்பிரமணியம் மதியழகன் - முத்தமிழ்வீதி, 1 ஆம் ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணம்)

**சிறிதரன்** (டேவிற் பாலகிருஷ்ணன் சிறீதரன் - 16, இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம்)

**டேவிற்** (செல்வன் லோறன்ஸ் தோமஸ் 143/1 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது கொல்லப்பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழ் இளைஞன், மற்றும் செங்கலடியைச் சேர்ந்த தமிழ் கட்டிடத் தொழிலாளி.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்டிருக்கும் மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4344)

Nallur Branch

# இந்திய மாகடல் பகுதியில் உருவாகும் ஆதிக்க சமநிலை

--ரோகன் குணசேகர

இந்திய மாகடல் பகுதியில் எதிர்காலத்தில் எழும் ஆதிக்க சமநிலையின் செல்லாக்கை பொறுத்துத் தான் சிறிலங்காவின் இந்தியாவுடனான நீண்டகால உறவு தங்கியிருக்கும்.

தற்பொழுது எழுத்தளவிலான இச்சமநிலை இந்தியாவின் சார்பிலேயே சாய்ந்துநிற்கிறது. இந்திய மாகடலின் ஓரங்களிலுள்ள ஏனைய நாடுகளை விட துணை கண்டத்தின் ஆதிக்கம் மேலாகவுள்ளது.

இந்த ஆதிக்க சமநிலை ஒவ்வொரு நாடும் தத்தமது நிலையை பலப்படுத்த முற்படும் போதும், சோவியத் அமைப்பின் சீர்குலைவு சர்வதேசவிவகாரங்களை பாதித்து முன்னெடுத்து செல்வதும், இந்த ஆதிக்க சமநிலையை தவிர்க்க முடியாதவாறு மாற்றியமைக்கும்.

சென்ற வாரம் இந்தியா தனது சுதந்திர நிலைப்பாட்டை வலியுறுத்தி அணுப் பரவாக்கலுக்கு எதிரான உடன்படிக்கையில் கைச்சாத்திடாததன் மூலம் உள்நாட்டிலும் அயல நாடுகளிலும் தனது நிலையை முன்னெடுத்துக்காட்டியுள்ளது.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், அமெரிக்க டியோகாசிய இராணுவத்தளம் அமைந்துள்ள சாகோச தீவுகளை தனதெனக்கோரும் இந்திய மாகடலிலுள்ள சிறிய தீவான மொரிசியஸ்சிற்கு இரண்டு நாள் பயணத்தைமேற்கொண்டார். மொரிசியஸ்சின் இவ் உரிமைக்கோரலுக்கு புதுடில்லி நீண்டகாலமாக சார்பாக இருந்து வந்துள்ளது.

மொரீசியசு தீவு தன்னை குடியரசாக பிரகடனப்படுத்திக் கொண்ட மார்ச் 12 ஆம் திகதி கொண்டாட்டங்களில் ராவ் பிரதம விருந்தாளியாக கலந்து கொண்டார். மகாத்மாகாந்தியின் 1929 ஆம் ஆண்டின் சத்தியாக்கிரக இயக்க ஆண்டு தினத்தைக் குறிக்கும் இத்திகதியில் குடியரசுப் பிரகடனம் செய்தமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அக்காலகட்டத்தில் தமிழ் நாட்டில் இந்திய இராணுவத்திற்கு வங்காளவிரிகுடாவை கண்காணிக்க கூடியதும், இந்திய மாகடலில் தனக்கு ஓர் "ஆதிக்க" நிலையை உருவாக்கக் கூடியதுமான ஓர் புதிய தளம் திறக்கப்பட்டது.

பூமிகோளத்தின் தலைநகரான வாசிங்டனில் வெளிவிவகார செயலர் ஜே என்.டிக்சிற் அணுபரவலாக்கத்திற்கு எதிரான உடன்படிக்கையில் இந்தியா கைச்சாத்திடாததை மீண்டும் வலியுறுத்தி அணு ஆயுத பிரச்சினை தீர்வு பற்றி அமெரிக்கர்களுடனும், பாகிஸ்தானியர்களுடனும் இருநாட்டு பேச்சுக்களை நடத்த வேண்டுமென்று வலியுறுத்தினார்.

அணுப்பரவலாக்கத்திற்கு எதிரான உடன்படிக்கையில், இரகசியமாக அணு ஆயுதங்களை உற்பத்தி செய்துள்ளது என சந்தேகிக்கப்படும் தென் ஆபிரிக்காவும், பிரான்ஸ் சீனா ஆகியவையும் கைச்சாத்திடுவதற்கு தீர்மானித்துள்ளன என்று அண்மையில் அறிவிக்கப்பட்ட போது இந்தியாவுக்கு இக்கட்டான நிலை ஏற்பட்டது. மேற்கூறிய நடவடிக்கை அணு ஆயுதங்களின் பரவலாக்கத்தை கட்டுப்படுத்தும் உடன்படிக்கையில், இந்தியாவும் பாகிஸ்தானும் கைச்சாத்திட வேண்டும் என்ற அழுத்தத்தை அதிகரித்தது.

பாகிஸ்தானை தண்டித்தது போல் இந்தியாவுக்கு அமெரிக்க இராணுவஉதவியை குறைப்பது குறைந்தளவு பாதிப்பையே ஏற்படுத்தும் காரணம் இந்தியாவிற்கான தற்போதைய அமெரிக்க இராணுவ உதவி கணிசமானதாக இல்லை.

சர்வதேச நாணய நிதியம்/ உலக வங்கி ஆகியவற்றின் உதவிகளுடன் இவ்வணு பரவலாக்கத்திற்கு எதிரான உடன்படிக்கையும் தொடர்புபடுத்தப்பட்டால் இந்தியாவின் நிலை சிக்கலாகலாம்.

இவ் உடன்படிக்கை பாரபட்சமானது அது ஐந்து பெரிய நாடுகளின் அணு உற்பத்தி ஏகபோக உரிமையை வளர்ப்பதாகவும், அவர்களை தொடர்ந்தும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யவும், ஏனைய நாடுகளை அவ்உற்பத்தியில ஈடுபடுத்தடை செய்வதாயும் உள்ளது என்று இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.

பிரான்சும் சீனாவும் இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டாலும் அணு ஆயுத பாதுகாப்பை கைவிட தேவையில்லை.

தென ஆபிரிக்கா இவ்வுடன்படிக்கையில் வெளிப்படையில் கைச்சாத்திட இணங்கினாலும் அது பல அணு கலன்களைஉற்பத்தி செய்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. அதே நேரத்தில் ஈரான், சீனா உதவியுடன் அணு ஆயுத ஆராய்ச்சியிலீடுபட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

எழுத்தளவில் இந்தியாவின் ஆயுதம் தரித்த படையினர் போர்த்தாங்கிகள், தாக்கும் வானூர்திகள், போர்க் கப்பல்கள், நீர் மூழ்கிக் கப்பல்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையளவிலான மேலாண்மை கவர்ச்சிகரமிக்கதே.

இக்கணக்குகள் மயக்கம் தருபவையாக உள்ளன ஏனெனில அவை சீனாவின் பயமுறுத்தல்களை பிரதிபலிக்கவில்லை. மேலும் இப்பகுதியில் மறைந்திருக்கும் ஆற்றலை உள்ளடக்கிய ஏனைய நாடுகள் யாவும், தத்தமது ஆயுதபடைகளை வலுப்படுத்தவும் கேந்திர முக்கியத்துவ ஆளுமையை வளர்க்கவும் ஏதுவான நோக்கங்களைக் கொண்ட இராணுவப் பெருக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

இந்தியாவின் தற்போதைய கேந்திர வடிவான எல்லைகள பலாக்கா நீரிணை, பேயல் மண்டேப் பிரதேசம் வரையும் விஸ்தரித்துள்ளது. இவ்விரண்டு பகுதியையும் நீண்டதூர கண்காணிப்பு வானூர்திகளாலும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர் வானூர்திகளாலும் கண்காணிக்க முடியும்.

இந்தியாவின் வான்படையால வான்வெளியில் படையினர் இருக்குமிடங்களுக்கு தாங்கிகளைக் கொண்டு செல்லக்கூடியதாக இருப்பது அல்ந்மாறுன் நிக்கோபார் தீவுகளிப் நிறுவப்படும் கடந்தரை லோர்ப் பயிற்சி கல்லூரியையும் அதன் ஆளுமையை மேலும் விரிவுபடுத்தும்.

இப்பிராந்தியத்தின் ஏனைய நாடுகளும் கடந்தபத்து ஆண்டு காலத்தில வாளாவிருக்கவில்லை. அவைகளின் ஆதிக்க சமநிலை மாறி வருகிறது.

சவுதி அரேபியாவும் ஈரானும் வரையறுக்கப்பட்ட தூரத்திற்குச் செல்லும் ஏவுகணைகளை வைத்திருக்கின்றன அதேவேளை இந்திய உபகண்டம் மற்றும் நான்கு நாடுகள் ஏவுகணைகளை தயாரிக்கும் திறனை பெற்றுள்ளன.

இந்நாடுகளில் அநேகமாக எல்லாமே செயற்கைக் கோள்களை உற்பத்தி செய்யவும் அவற்றை ஏவும் திறனையும் கொண்டிருக்கின்றன.

ஆனால் அந்நாடுகள் எல்லாம எதிர்கால வளர்ச்சியை தடை செய்யும் பல மில்லியன் டாலர்களுக்கு கடனாளியாக உள்ளன.

நன்றி: ஐலண்ட் 15-3-92

# நஜிபுல்லா தவிர்ந்த ஏனையோருக்கு அரசு பொதுமன்னிப்பு வழங்கும்

## -இடைக்கால சபைத்தலைவர் ஷேக் அப்துல்லா

(காபூல்)

ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி நஜிபுல்லா தவிர்ந்த ஏனையவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாய் பேராசிரியர் ஷேக் அப் துல்லா முஜாதிக் அறிவித்துள்ளார்.

காபூலில் நேற்று முன்தினம இதனை அறிவித்த அவர் நஜிபுல்லாவின் தலைவிதியை ஆப்கான் மக்களே தீர்மானிப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் ஆப்கானிஸ்தானை ஓர் இஸ்லாமியக் குடியரசாக பிரகடனம் செய்துள்ளதாகவும், தெரிவித்தார்.

அத்துடன் அரசியல் புகலிடம் கோரி ஈரான், பாகிஸ்தான் மற்றும் நாடுகளில் தஞ்சமடைந்துள்ள ஆப்கான் அகதிகளை திரும்பி தாயகம் வருமாறும்ஷேக்அப்துல்லா முஜாதீக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த இடைக்கால அரசை முதன் முதலாக பாகிஸ்தான் அரசு அங்கீகரித்துள்ளதாக அறிவித்துள்ளது. இது தொடர்பான செய்தியொன்றினை பாகிஸ்தானிய பிரதமர் நவாப்ஷெரீப் இடைக்கால சபையின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மேலும் இடைக்கால அரசின் தலைவரை பிரான்ஸ், ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தூதர்கள் சந்தித்துப் பேசினர்.

இதே நேரம் புதிய அரசில் சேருவதற்குஇதுவரை மறுத்து வந்த குல்பதீன் ஹெக்மத்தியார் தலைமையிலான நஸ்புல் இஸ்லாமியக் கட்சி பிரதம மந்திரி பதவிக்கு தமது சார்பில் ஒருவரை நியமித்துள்ளது.

# இந்திய,ஆப்கான்உறவுகளில் நேசம் நிறைந்திருக்கும்

(காபூல்)

இந்தியாவுடன ஆப்கானிஸ்தான அன்பும் நேசமும் நிறைந்த உறவுகளை கொண்டிருக்கும் என்று ஆப்கானிஸ்தான் இடைக்கால சபையின் தலைவர் பேராசிரியர் ஷேக் அப்துல்லாதெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காபூலில் 'ஏசியா நியூஸ் இன்டர் நேஷனல்' என்னும் அமைப்பின கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் பிராந்தியத்துக்கு ஆப்கானிஸ்தான் உயர் முன்னுரிமை கொடுக்கும் இந்த வகையில் இந்தியாவுடனான பாரம்பரிய தொடர்புகள் சிறப்பம் முக்கியத்துவமும் பெறுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பெண்கள் பிரதி நிதிகள்

# காங்கிரஸ் செயற்குழுவில் இடம் பெற வேண்டுகோள்

திருப்பதியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட காங்கிரஸ் உயர்மட்ட செயற்குழுவினர் நேற்று முன்தினம் பிரதமர் பி. வி நரசிம்மராவ்தலைமையில் புதுடில்லியில் கூடிய போது தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மற்றும்பெண்கள்பிரதிநிதிகள் கட்சியின் செயற்குழுவில் இடம் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பிரதமரைக் கேட்டுக்கொண்டனர்.

ஜிதேந்திர பிரசாத் உட்பட கட்சியின் செயற்குழு உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த அனைவரும் தனித்தும் ஒருமித்தும் பிரதமர் நரசிம்மராவிற்கு தமது ஆதரவை மீள உறுதிப்படுத்தியதுடன் திருப்பதி மாநாட்டிற்கு பின்னான அரசியல் நிலை குறித்தும் ஆய்வு செய்தனர்.

# ரஷ்யாவின் நீர்மூழ்கி விற்பனைக்கு இல்லை

காமன்வெல்த் சுதந்திர குடியரசு விக்டர் 11 ரகஅணுசக்தி நீர்மூழ்கி ஒன்றை அமெரிக்க கடற்படைக்கு விற்க முன்வந்திருப்பதாககூறப்பட்ட செய்தியொன்றுக்கு அமெரிக்ககப்பல் படையினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

ஜேன்ஸ் பாதுகாப்புச் சஞ்சிகை வெளியிட்ட செய்திக்கே இவ்வாறு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட மேற்படிசஞ்சிகையில் இந்த நீர்மூழ்கியைக் கொள்வனவுசெய்வது குறித்து அமெரிக்கா ஆராய்ந்ததாகவும் ஆனால் விலை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது

இந்தச் செய்தியை வாஷிங்டனில் கடற்படையினர் மறுத்துள்ளனர்.

சுதந்திர காமன்வெல்த் குடியரசுகளின் நிதி நெருக்கடியே இராணுவம் வசமுள்ளவற்றை அமெரிக்காவுக்கு விற்பனை செய்யக் காரணமாயிருக்கின்ற தென வாஷிங்டன் வட்டாரங்கள் தெரிவித்தன.

## போபர்ஸ் பீரங்கிப் பேரவிசாரணை

# அனைத்து உதவிகளையும் சுவிஸ் அரசு வழங்கும்

போபர்ஸ் பீரங்கிப் பேரம் குறித்த விசாரணையில் தமது அரசு தொடர்ந்து எல்லா உதவிகளையும் அளித்து வருமென்று இந்தியாவுக்கான சுவிற்சலாந்து தூதுவர் கூறியிருக்கிறார்.

கேழிக்கோட்டில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர் இந்தப் பேரத்தில் அடங்கியுள்ள ஊழல்களைக் கண்டு பிடிப்பது இந்திய அரசின் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டினார்.


## நகராட்சித் தேர்தல்கள

# இஸ்ரேலிய யோசனைகள் பாலஸ்தீனர் பரிசீலனை

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான இஸ்ரேலிய யோசனையைப் பரிசீலிக்க ஐந்தாவது சுற்று மேற்கு ஆசிய சமாதானப பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் பாலஸ்தீனப்பிரதிநிதிகள் இணங்கியுள்ளார்கள்.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் கடந்த திங்கட்கிழமை வாஷிங்டனில் ஆரம்பித்த போது இந்த யோசனை தெரிவிக்கப்பட்டது.

# ஓராண்டுநினைவு அஞ்சலி



## வீரவேங்கை நாகேஸ்

வீர ஜனனம் 7.4.1973 — வீரச்சாவு 30.4.1991

மேலவனை மெய்யென்று எண்ணி ஓராண்டாய்
இவ்வுலகை விட்டு நீ நாகேஸ்
பொன்னுலகம் போய்ப்புகுந்தாய் செல்வா
உனை எப்பிறப்பிற் காண்போம் இனி

திரு. திருமதி இரத்தினசிங்கம் வளர்ப்புப் பெற்றோர், மைத்துனன் ரவி.

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (2497)

# பிறந்ததின வாழ்த்து



## செல்வி ப. கஜநீபா

30. 04. 1992

செல்வி கஜநீபா என்னும்
திருவருள் பெருகும் செல்வி
நல்வரம் வழங்கும் ஞான
நாயகன் கணேசன் பாதச்
சொல்வளர் கருணை பொங்கிச்
சுகம் பொங்கி அன்பு பொங்கி
கல்வியின் பண்பு பொங்கி
கதிரவன் போல வாழி

இணுவில் தெற்கு பரராசசேகரப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த பவளராஜன் ஞானகலாவாணி தம்பதியினரின் செல்வப் புதல்வி கஜநீபா தனது முதலாவது பிறந்ததினத்தை (30 04 1992) இன்று தமது இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் பரராசசேகரப்பிள்ளையார் அருளுடன் சகல கலைகளும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.

(சி/4340)

# வீட்டுக்கிரியை அழைப்பிதழும் நன்றி நவிலலும்



## அமரர் கந்தையா சற்குணசிங்கம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 — 05 — 1937 | 02 — 04 — 1992 |

கடந்த 02. 04. 1992 அன்று இறையடி எய்திய எமது அன்புக்குரிய அமரர் கந்தையா சற்குணசிங்கம் அவர்களின் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திக்கிரியைகள் 1. 5. 1992 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கு சகலரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம். அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட யாவருக்கும் எமது உளமார்ந்த நன்றி நவில்கின்றோம்.

மீசாலை, தெற்கு,
மீசாலை

இங்ஙனம்
குடும்பத்தினர்

(சி-4336)

# மேதின எழுச்சி தெருக்கூத்து

(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர் தினமான மேதினத்தை யொட்டி தமிழ் மக்களை எழுச்சியூட்டும் வகையில் தெருக்கூத்து நிகழ்ச்சிகள் யாழ். மாவட்டத்தில் ஆங்காங்கு நடைபெற்று வருகிறது.

ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் விடுதலையை நோக்கிய சிந்தனையைத் தூண்டுகின்ற அதேவேளை தமிழ் மக்களை எழுச்சியடையச் செய்வதற்காகவும் எதிர்வரும் மேதின எழுச்சிப்பேரணிக்கும் பொதுக்கூட்டத்திற்கும் பறைசாற்றும் முகமாகவும் மேற்படி தெருக்கூத்து நிகழ்ச்சிகள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்தப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சிகளை நூற்றுக்கணக்கான மக்கள் கண்டு களித்து வருகின்றனர் (க)

# கற்பூர புல் எண்ணெய்

கற்பூரப் புல்லில் இருந்து எண்ணெய் வடிக்கும் பரீட்சார்த்த முயற்சியினை முல்லைத்தீவுப் பிரதேச கிராமிய உற்பத்திக் குழுக்கள் மேற்கொண்டுள்ளன.

வடித்துப் பெறப்பட்ட புல் எண்ணெய் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரால் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

# அகதிகள் அவதி

தமிழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட அகதி மக்கள் வவுனியாவில் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்த அகதி மக்கள் வவுனியா நகரப்பகுதி அகதி முகாம்களில் தங்கி வாழ முடியாத நிலையில் கிராமப் புறங்களை நாடி வந்து கொண்டிருக்கின்றனர்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவித் தொகை போதாத நிலையில் பல அகதி மக்கள் பெருந்துயர் அடைந்துள்ளனர்.

மிக மோசமான நிலையில் வந்து சேரும் இந்த அகதி மக்கள் அனைவரும் தமது வீடுகள் சேதமடைந்ததனாலும், தொடர்ந்து எல்லைப் பகுதியில் இடம்பெற்றுவரும் இராணுவத்தின் யுத்த நடவடிக்கையினாலும் தங்க இடமற்று, சுயதொழில் செய்ய முடியாத நிலையில கஷ்டப்படுகின்றனர். (தி)

# ஜனசவிய நிவாரணத்திற்கு 'கைலன்ட்'

ஜனசவிய நிவாரணம் பெறுவோருக்கு 'கைலன்ட்'பால்மா வழங்கப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது இப் பால்மா பைக்கட்டுகள் தற்போது பாவனையாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக கூட்டுறவு சங்கங்களிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து மீளப்பெற்று ஜனசவிய நிவாரணம் பெறுவோருக்கு வழங்கும்படி மில்கோ நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# பெற்றுக்கொள்ளவும்

பெரிய விளானைச் சேர்ந்த சரவணமுத்து வினாசித்தம்பி (201110548 V) அதே இடத்தைச் சேர்ந்த பூரணம் வினாசித்தம்பி (287320094 V) ஆகியோர்களது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

சாவகச்சேரியைச் சேர்ந்த பரமேஸ்வரி வேலுப்பிள்ளை என்பவரின் அடையாள அட்டை (505160355V) ஒன்று கொழும்புத்துறை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

# ஊர்வலத்தில் பங்கு கொள்ளவும்

விடுதலைப் புலிகளால் நடத்தப்படும் மேதின ஊர்வலத்தில் விடுமுறையில் நிற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் அந்தந்தப் பகுதியில் இணைந்து கொள்ளுமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

# அறிவித்தல்

## யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

க. பொ. த. உயர்தர வகுப்புக்கள்
04. 05. 92 இல் இருந்து ஆரம்பமாகின்றன
**விஞ்ஞான, வர்த்தகம், கலை பிரிவுகள்**


விண்ணப்பப் படிவம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 3. 5. 92

அதிபர்

(2519)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | பறிப்பு |
|---|---|---|
| 23 |  | 30 |
| — | | — |
| 11 | | 4 |
| — | | — |
| 1963 | | 1989 |

## சின்னத்துரை பிரபாகரன்

(யாழ். பல்கலைக்கழக, வரலாற்றுத்துறை இறுதி வருட மாணவன்)

"...நன்மை, தீமை இரண்டும் சேர்ந்துதான் இவ்வுலகை உருவாக்குகின்றன. வரலாற்றில் வெறும் நன்மைக்குள் மட்டுமே மனிதன் வாழ வேண்டியிருந்தால் அவனுக்கு எந்த வேலையுமிராது, அவனது வேலை உடைந்த உலகை ஒன்று சேர்ப்பதுதான்."

யாழ்ப்பாணம்
30. 04. 92

- நண்பர்கள்

(சி-4344)

# ஓர் ஆண்டு நினைவாக



வீரஜனனம்
8 . 1 . 1972

வீரச்சாவு
30 . 4 . 1991

## வீரவேங்கை மதியழகன் (அழகன்)

சுப்பிரமணியம் மதியழகன்

எங்கள் அன்புச் செல்வமே!

அன்புக்கு இளைய மகனாக ஆசைக்கு ஒரு தம்பியாக குழந்தைப் பருவத்தில் குதூகலத்துடன் காணப்பட்டாய். பின் ஒரு இலட்சியத்துக்காய் புலிவீரனாய் மாறியதும் பல சாதனைகள் புரிய நினைத்தாய். ஆனால் அது மறையுமுன் திடீரென மறைந்து விட்டாய் ஐயா!

ஆனால் ஒரு அழியாத ஓவியம்
சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க நினைத்தாய்
அது உன் சுவாசத்தையே நிறுத்தி விட்டது
ஆனாலும் நீ ஓர் காவியமாகி விட்டாய்
இனி உன் வரலாறு புகழ் பாடும் ஐயா!

இவருடன் வீரமரணமடைந்த 12 வீரர்களுக்கும் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் ஏங்கும்:
முத்தமிழ் வீதி, சுப்பிரமணியம் குடும்பத்தினர்.
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(2520)

## சிந்தனைக்கு

ஒரு திட்டத்தோடு தொடங்காதே
ஒரு செயலோடு தொடங்கு
- பீட்டர் மார்ஷல்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-3832 நிர்வாகபீடம் 3301
த. பெ. எண் 03

# தெரிவுக் குழுவால் எதுவரை முடியும்?

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகப் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கும் தீர்வுத் திட்டத்தை அவ்வாறே அமுல்படுத்தப் போவதாகவும், இவ்வருட இறுதிக்குள் தெரிவுக்குழு தன் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும் எனத் தான் உறுதியாக நம்புவதாகவும் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

இவ் அறிவிப்பின் மூலம், பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலையில் பெரும் சுமை ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதி ஏற்றியுள்ளார் என்றே சொல்லவேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஓர் பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரான மங்கள முனசிங்கா தனிநபர் பிரேரணை கொண்டுவந்தபோது வழமைக்கு மாறாக அதைப்பற்றிப் பிடித்துக்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம், திரு. மங்கள முனசிங்கா தலைமையிலேயே ஒரு பாராளுமன்றத் தெரிவுக்குழுவையும் ஏற்படுத்தியது. பின்னர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவே இனப்பிரச்சினைக்கான தீர்வை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற சுமையையும் ஏற்படுத்தியது.

ஆனால், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நிலையோ பெரும் இழுபறி நிலையில் உள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் பிரதான சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தீர்வுத்திட்டம் எதையும் முன் வைக்கவில்லை. முன்வைக்க வேண்டிய அவசியமுமில்லை எனவும் தெரிவித்துமுள்ளன. இதேவேளை,

மக்கள் ஆதரவு சிறிலங்காவிலுள்ள சிங்களக்கட்சிகளும், மக்களாதரவு அற்ற கொழும்பில் தங்கியுள்ள தமிழ்க் குழுக்களுமே தமது தீர்வுத்திட்டத்தை முன்வைத்துள்ளன.

இதேவேளை, பாராளுமன்றத் தெரிவுக்குழு, இனப்பிரச்சினை குறித்து தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கும் போது மூன்று அம்சங்களைத் திட்டவட்டமாகக் கருத்திற் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. ஒன்று இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை தமிழ்த் தரப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டு, தீர்வுத் திட்டம் அமுல்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். அதாவது, விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். மூன்றாவது இத்தீர்வுத் திட்டத்தை சிங்கள அரசியற்கட்சிகள் -ஐ.தே.க, சிறி. சு.கட்சி ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும்.

ஆனால், இவை எந்தளவிற்குச் சாத்தியமாகும். அரசியற் பலமற்ற அரசியற் கட்சியை முன்வைத்த தீர்வுத் திட்டங்களே பெரும் முரண்பாடு கொண்டவையாகவும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால், இணக்கப்பாட்டிற்கு வர முடியாதவையாகவும் உள்ளன. தமிழ் குழுக்களின் தீர்வுத் திட்டங்களில் வடக்கு - கிழக்கு இணைப்பு முக்கிய அம்சமாகவும் அவசியமான தொன்றாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது - ஆனால் சிங்களக் கட்சிகளின் தீர்வுத்திட்டம் எவையும் வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு ஆதரவாக இல்லை.

யதார்த்த பூர்வமாக நோக்கும் போது தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு இன்று ஓர் அரசியல் தீர்வு என்பது குறைந்த பட்சம் 1987 இல் ஏற்பட்ட இந்திய-சிறிலங்கா ஒப்பந்தத்திற்கும், உயர்ந்த பட்சம் தமிழீழத்திற்கும் இடைப்பட்ட ஒன்றாகவே முன்வைக்கப்பட வேண்டிய ஓர் நிலை உள்ளது. இதில், தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு உகந்தளவு திட்டம் எது என்பது பற்றி தமிழரே முடிவெடுக்க முடியும் இந்நிலையில் வடக்கு - கிழக்கு இணைப்பு தவிர்ந்த எந்தத் திட்டமும் வெற்றி அளிக்கப்போவதில்லை.

இந்நிலையில் சிங்கள அரசியல் கட்சிகளோ வடக்கு-கிழக்கு இணைப்பை வன்மையாக எதிர்க்கின்றன. பெரிய சிங்களக் கட்சிகளோ மௌனம் சாதிக்கின்றன. இந்நிலையில், பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் ஒரு பொருத்தமான தீர்வுத் திட்டத்தை இவ்வருட இறுதிக்குள் தீர்க்க எப்படி முடியும்? அரசியலில், பலமிக்க சிங்கள அரசியல் கட்சிகள் இதே போக்கைக் கடைப்பிடித்தால் இவ்வருடம் என்ன இது போன்று எத்தனை வருடங்கள் வரினும் பாராளுமன்ற தெரிவுக் குழுவால் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் எதையும் சமர்ப்பிக்க முடியாது.

# உற்பத்தி எழுச்சி வாரப் போட்டி முடிவுகள்

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு உற்பத்தி எழுச்சி வாரத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

நடத்தப்பட்ட போட்டிகளில் 01. 04. 91 தொடக்கம் 31. 3. 92 வரையான காலப் பகுதியில் ஆகக் கூடிய உற்பத்தியாக 20. 950 போத்தல்கள் பதனீரை உற்பத்தி செய்து முதலாமிடத்திற்கான தங்கப் பதக்கத்தினை சங்கானை தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க அங்கத்தவராகிய சங்கானை நிற்காமத்தைச் சேர்ந்த மு. விமலராசா அவர்களும், இரண்டாமிடத்திற்கான வெள்ளிப்பதக்கத்தினை 13. 485 போத்தல்கள் பதனீரை உற்பத்தி செய்த பருத்தித்துறை /புலோலி சங்கத்தைச் சேர்ந்த குடும்பிலாவத்தை, ஆலங்கட்டை அல்வாய் வடக்குஅல்வாய்வாசியானநா. சிவராசாஅவர்களும், மூன்றாம் இடத்திற்கான வெண்கலப் பதக்கத்தினை 12, 712 போத்தல்கள் பதனீரை உற்பத்தி செய்த சங்கானை சங்கத்திலுள்ள சங்கானை நிற்காமத்தைச் சேர்ந்த மு. நாகேஸ்வரன் அவர்களும்பெறவுள்ளனர்.

ஏனைய போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் பரிசு பெறவுள்ளோர் விபரம் வருமாறு:

### பனை ஏறும் போட்டி

முதலாமிடம் - தி, அருமைத்துரை (அளவெட்டி, மல்லாகம்) இரண்டாமிடம்- த.ரதீஸ்வரன் (அரியாலை) மூன்றாமிடம்-க. மதன் (பருத்தித்துறை)

### குட்டான் இழைத்தல்

முதலாமிடம் - செல்வி இ. ரஞ்சலாதேவி, (அல்வாய் வடக்கு) இரண்டாமிடம் - செல்வி வை. கமலாதேவி (அல்வாய் வடக்கு) மூன்றாமிடம்-செல்வி ப.யோகேஸ்வரி, (அச்சுவேலி)

### கிடுகு பின்னல் போட்டி

முதலாமிடம் - செல்வி, பார்வதனி, (அரியாலை) இரண்டாமிடம் - செல்வி தே.ஜெயந்தி (அரியாலை) மூன்றாமிடம் - செல்வி க.பராசக்தி (கரம்பைக்குறிச்சி, வரணி)

### துலா மிதித்தல் (ஆண்கள்)

முதலாமிடம்-இராமு கருணராசா, முருகன் செல்லத்துரை இரண்டாமிடம் - வேலுப்பிள்ளை சிவலிங்கம், இராசையா நகுலேஸ்வரன் மூன்றாமிடம்-மு.சிவஞானம், த. பரமசிவம்

### துலா மிதித்தல் (பெண்கள்)

முதலாமிடம் - செல்வி க. தர்மஞானேஸ்வரி செல்வி க. தர்மரத்தினேஸ்வரி இரண்டாமிடம்-செல்வி. கு. சுமதி, செல்வி, கு. வசந்தி மூன்றாமிடம் - செல்வி, சி. சசிகலா, செல்வி ஆ. இராசேஸ்வரி

### உணவு பதனிடல்

முதலாமிடம் -செல்வி. யோ பரராஜசிங்கம் (ஆவரங்கால், புத்தூர்) இரண்டாமிடம்-திருமதி பொன்னம்பலம் சந்திரவதனி அம்மாள் (ஆவரங்கால் புத்தூர்) மூன்றாமிடம் - திருமதி. சோதிலிங்கம் தெய்வமலர் (வாலினி வீதி ஊறணி வல்வெட்டித்துறை)

அரச சார்பற்ற அமைப்புகளுக்கு

# அரசியல் அபிலாசைகள் உகந்ததொன்றல்ல

- பிரேமதாசா

(கொழும்பு)

அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுக்கு அரசியல் ஆசை உகந்ததல்ல என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார். இலங்கை கண் தான சங்கத்தின் முப்பதாயிரமாவது கண் அன்பளிப்புச் செய்யும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் கூறுகையில், அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து வளர்முக நாடுகளில்மிகுந்த விசனம்தெரிவிக்கப்படுகிறது.

உள்நாட்டு, வெளிநாட்டுக் கொடைவள்ளல்கள் வழங்கும் நிதியுதவிகள் பல ஆசைகளை ஊட்டுவதாக இருக்கின்றன. அரசியல் செல்வாக்கு ஆசை, கட்டுக்கடங்காத மமதை, உலகம் தன்னையே மதிக்கவேண்டும் என்னும் பேரவா, குடும்ப நல உரிமைகளை உறுதி செய்யும் போக்கு, பணச்செப்படி வித்தை என்பன போன்றவை அரச சார்பற்ற நிறுவனங்களுக்குப்பொருத்தமானதல்ல எனவும் சுட்டிக்காட்டினார்.

# மேதினப் புரட்சியினூடு புதிய வரலாறு படைப்போம்

- பல்கலைக்கழக மாணவரவை

(யாழ்ப்பாணம்)

உலகெங்குமுள்ள உழைக்கும் மக்கள் ஒவ்வொரு வருடமும் மேதினத்தை தங்களின் ஒருமைப்பாட்டுத் தினமாக கொண்டாடுகின்றனர். சகல வேறுபாடுகளையும் ஒதுக்கிவிட்டு வர்க்க அடிப்படையில் ஒன்று பட்டு ஒரே குரலில் தமது இலட்சியத்தை பிரகடனப்படுத்தும் நாளாக மேதினம் அமைகின்றது என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த மேதினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது சுரண்டும் வர்க்கத்திற்கு எதிராக சுரண்டப்படும் வர்க்கம் கடந்த காலங்களில் தானாற்றிய வீரப் போராட்டங்களை நினைவு படுத்தி எதிர்காலப் போராட்டங்களுக்கு வீரச்சபதம் செய்யும் நாள். சகல அடக்கு முறைகளையும் ஒழித்துக்கட்டி சமாதான சூழ்நிலையில் சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் வாழும் ஒருமித்து குரலெழுப்பும் நாளாகும்.

இந்நாளில் பெண்கள் குறித்து புதியதோர் சிந்தனையும் விழிப்பும் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இம் மேதினத்தில்பெண்களின் சகல விதமான உழைப்பு பற்றியும் அவர்கள் மத்தியில் புரட்சிகர உணர்வை வளர்த்தெடுப்பது பற்றியும் சமூகத்தின் முற்போக்கு சக்திகளும் சிந்திக்கத் தலைப்பட வேண்டும்.

தமிழீழத்தில் இன்று கொண்டாடப்படும் மேதினமானது சகல தொழிலாளர்களும், சகல மக்களும் ஒரு தலைமையின் கீழ் அணிதிரண்டு அடக்கு முறை இயந்திரத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் ஓர் ஒப்பற்ற தினமாக அமைகின்றது.

தமிழீழத்தில் புதிய வரலாறு படைக்கும் இன்றைய நாளிலே அகிலம் பூராகவும் தொழிலாள வர்க்கம் மேன்மை அடைய வேண்டுமென்ற கார்ல்ஸ் மார்க்கினதும், பிரெட்ரிக் ஏங்கல்சினதும் கனவுகள் நனவாகட்டும். பாட்டாளி தொழிலாள வர்க்கப் போராட்டங்கள் வெற்றியடையட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனைப் பகுதியில்

# அறுவடையான நெல் மூடை சிறி. இராணுவத்தால் பறிப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பகுதியிலுள்ள மீராவோடை தமிழ்ப் பிரிவு கிண்ணையடி முதலான பிரதேச வயல் நிலங்களில் அறுவடை செய்யப்பட்ட பெருந்தொகையானநெல் சிறிலங்கா இராணுவத்தினரால் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது.

இந்த நெல் விவசாயிகளுக்கு சொந்தமானது, ஆனால் இராணுவத்தினரோ இந்த நெல்லை விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானது என்று ஏற்றிச் சென்றுள்ளனர். ஆகவே அதனை உரிய விவசாயிகளிடம் திருப்பிஒப்படைக்கஆவன செய்ய வேண்டும் என்று மட்டக்களப்பு அரசாங்க அதிபரிடம் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை வாழைச்சேனை பகுதியில் பாதிக்கப்பட்டவர்கள் புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளுக்காக விண்ணப்பிக்கும் போது பாதிக்கப்பட்டதற்கான அத்தாட்சியைச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்கப்படுகின்றனர். பாதிப்பை அத்தாட்சிப்படுத்துவது சாத்தியமான காரியமல்ல. இவ்வாறு கேட்பதை அதிகாரிகள் நிறுத்த வேண்டும் என்றும் அரசாங்க அதிபரிடம் கேட்கப்பட்டுள்ளது.

தனியார் வர்த்தக

# வங்கி ஊழியர்களுக்கு யூலை முதல் சம்பள உயர்வு

தனியார் வர்த்தக வங்கிகளில் பணியாற்றும் சுமார் எண்ணாயிரம் ஊழியர்களுக்கு இருபத்தியேழு வீத சம்பள உயர்வு வழங்கப்படும் என இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வர்த்தக வங்கி ஊழியர்களின் மூன்று கோரிக்கைகள் தொடர்பான ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்திடப்படும் என்றும் இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பள உயர்வு யூலை மாதத்தில் இருந்து அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழரை விரட்டும் நிலையில் தமிழகத்து அகதி முகாம்கள்

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகள் எவரையும் நெருங்கித் திருப்பி போகுமாறு அரசு அதிகாரிகள் சொல்லவில்லை என இந்திய அதிகாரிகள் கூறினாலும் முகாம்களில் உருவாக்கபபட்டிருக்கும் சூழ் நிலைகள் ''இங்கே நீங்கள் நீடித்திருப்பது எங்களுக்குப் பிடிக்கவில்லை'' என்றும் செய்கையால் உணர்த்துவதாகவே உள்ளது. என்று சென்னை பி.பி.சி. நிருபர் சாம்ராஜப்பா கூறுகிறார்.

சிலருக்கு உணவுப் பொருள்கள் வழங்குவதுதற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. சிலருக்கு உதவிப்பணம் கொடுப்பதுவும் தாமதப்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் இலங்கைத் தமிழ் அகதி மாணவர் அனுமதிக்கப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளதுஎன்று சாம்ராஜப்பாதெரிவிக்கிறார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; இலங்கைத் தமிழர்கள் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பவர்கள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கவே அவர்கள் தமிழகத்தில் தங்கியுள்ளார்கள் அது இயலாது என்றால் அங்கு தங்கியிருப்பது வீணாகிறது என்று பி பி சி. நிருபர்சாம்ராஜப்பா தெரிவிக்கிறார்.

இதேவேளை இதுகுறித்து அகதி ஒருவர்தெரிவிக்கையில்,

நாங்கள் இங்கு தங்கி இருக்க விரும்பவில்லை. நாங்கள் இலங்கைக்கே திரும்பி விடுகிறோம் ''திரும்பிச் செல்லுங்கள், திரும்பிச் செல்லுங்கள்'' என்று ஓயாமல் வற்புறுத்துகிறார்கள் ஓர் அதிகாரி என்னுடைய குடும்ப அட்டையை பறித்துக் கொண்டார். திரும்பிச் செல்லும் பட்டியலில் என் குடும்பத்தையும் சேர்த்து அவரே எழுதி விட்டார். எங்களைப் போன்று 102 குடும்பங்கள் அகதிமுகாம்களிலிருந்து சென்னைக்கு வந்துள்ளன. மீண்டும் அகதிமுகாம்களுக்கு எங்களில் பலர் திரும்பிச் செல்ல விரும்பவில்லை சென்னையை விட இலங்கையே மேலாகிவிட்டது.

-இவ்வாறு ஒரு அகதி பி. பி. சி. சென்னை நிருபர் சாம்ராஜப்பாவிற்குஅளித்தபேட்டியில் கூறினார்.

# விடுதலைபுலிகளுக்கு தடை? இந்திய அரசு ஆலோசனை

(டில்லி)

விடுதலைப் புலிகள் இயக்கம் சட்டவிரோதமானது என்று அறிவிப்பது பற்றி இந்திய மத்திய அரசு தீவிரமாகப் பரிசிலித்து வருவதாக உள்துறை இணை அமைச்சர் எம் எம். ஜேகப் கூறியுள்ளார். நேற்று முன்தினம் இந்திய பாராளுமன்றத்தில் எழுத்து மூலமாக அளித்த பதில் ஒன்றில் அவர் மேலும் கூறுகையில், அந்த இயக்கத்தின் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு இந்த விடயம் பரிசிலிக்கப்படுவதாக தெரிவித்தார்.

தமிழக பொலிஸ் பணிப்பாளருக்கு

# டில்லி உச்ச நீதி மன்றம் அழைப்பாணை

இலஸ்ரேட்டட் வீக்லியின் சென்னை முன்னாள் நிருபர் கே.பி. சுணிலைத் கைது செய்து தம் முன் ஆஜர் செய்யுமாறு தமிழக சட்டப் பேரவைச் சபாநாயகர் சேடப்பட்டி மூத்தையா பிறப்பித்திருந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுமீது இடைக்கால தீர்ப்புஎதுவும்வழங்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது..

சுணிலை கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட ஆணையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவிட்டு, பொலிஸ் கமிஷனர் மாநில அரசு ஆகியவற்றிற்குக் கடந்த வெள்ளிக் கிழமை உச்ச நீதி மன்றம் ஆணை பிறப்பித்திருந்தது.

சட்டப்பேரவைச் சபாநாயகர், நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டப்பேரவையைக் கட்டுப்படுத்தாது என்று அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர் சுணில் நேற்று முன்தினம் உச்ச நீதி மன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதி மன்ற இரு நீதிபதிகள் மத்திய அரசுக்கும், தமிழ் நாடு பொலிஸ் பணிப்பாளருக்கும் இந்த வழக்கில் ஆஜராகும்படி அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.

## தடை செய்யப்பட்ட

விண்வெளி வீரர்களுக்கு ஏற்படும் அதிர்ச்சி, வயிற்றோட்டத்துக்குக் கொடுப்பதற்கென்று லிமோட்டல் அமெரிக்காவல் தயாரிக்கப்பட்டது. பிரத்தியேக தேவைக்கெனத் தயாரிக்கப்பட்ட லிமோட்டலையும் மற்றும் இமோடியத்தையும் வயிற்றோட்ட நோய்க்குப் பொடி செய்து சில வைத்தியர்கள் கொடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மருந்தை வயிற்றோட்டத்துக்கு உட்கொள்பவர்களுக்கு மரணம் சம்பவிக்கலாம் என்று கொழும்பில் தனியார் மருத்துவர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த மருந்து வகைகளை தகுதி வாய்ந்த ஆங்கில மருத்துவரின் சிட்டை இல்லாமல் விற்பனை செய்யக் கூடாது என்பது விதிமுறை.

# பயிற்சியில் ஈடுபட்ட விமானம் வானில் தீ பிடித்தது

[சென்னை]

இந்திய விமானப்படை பயிற்சி விமானம் ஒன்று செங்கை எம். ஜி. ஆர் மாவட்டம் பாலத்தூர் அருகே நேற்று விழுந்து நொறுங்கியது.

தாம்பரத்திலிருந்து புறப்பட்ட இந்த வமானத்தில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாக நடுவானத்தில் விமானம் தீ பற்றியது.

பயிற்சி விமானிகள் இருவரும் பரசூட் மூலம் குதித்து விட்டனர். இந்த விமானம் விழுந்து நொருங்கிய இடத்தில்இரண்டு மாடுகள்இறந்தன

## வீரச்சாவு

குதலின் போது இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த இரண்டாம் லெப்டினன்ட் யோகராசா (நடராசா புவனேந்திரன், வாழைச்சேனை) வீரச்சாவை தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீர வணக்கம் தெரிவித்துள்ளனர்.

# அரசியல் சிந்தனையில் புரிந்துணர்வு உள்ளதாம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசியல் தலைமைப் பீடத்திற்கும் இந்திய அரசியல் தலைமைப் பீடத்திற்கும் இடையில் பொருளாதார கொள்கைகள், அரசியல் சிந்தனைகள் பற்றியசிறந்தபுரிந்துணர்வு ஏற்பட்டுள்ளதாக வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய மன்சூர் இதனைத் தெரிவித்தார்.

# குடும்ப அட்டைகளுக்கு விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் சகல குடும்பங்களைச் சேர்ந்தவர்களையும் குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதுவரை விண்ணப்பிக்காமல் உள்ளோர் விண்ணப்பிக்கும்படி யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (பா)

## கிழக்கில்

மாக இருக்கலாமென சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி. பி. சி. தெரிவித்தது.

## நிவாரணம்

கான குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. இதனால் பட்டினிச்சாவை எதிர் நோக்கி உள்ள தமக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனக்கோரி நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் பிரிவில் முறையிட்டனர். (பா)

## கட்டுநாயக்கா

கடந்த சனியன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டதை தொடர்ந்தே விமான நிலையப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபிராந்திய
சுருட்டுத் தொழிலாளர் சங்கம்
மேதின ஊர்வல
அழைப்பிதழ்

எதிர்வரும் 1992 மே 1 ஆம் நாள் நடைபெற இருக்கும் மேதின ஊர்வலத்தில் பங்குபற்றுவதற்கு முன்னேற்பாடாக சகல சுருட்டுத் தொழிலாளர்களையும் அன்றையதினம் நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தவறாது சங்கப் பணிமனைக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வடபிராந்திய சுருட்டுத்
தொழிலாளர் சங்கம்,
கொக்குவில்.

[சி/4345]

# மே தினத்தில் ஆசிரியன[…] அணிதிரள அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் மீதான கல்விப்படுகொலைகள் உலகின் முற்றத்தில் ஒலிக்கச் செய்து சிறிலங்காவின் பாதகச்செயல்களை முரசறையும் வகையில் அதிபர், ஆசிரியர்கள், கல்வி ஊழியர்கள், தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் மே தினத்தின் போது ஒன்றாக அணிதிரண்டு ஒடுக்குமுறைக்கு எதிராக ஒருமித்த குரலெழுப்புவோம்.

இவ்வாறு தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் விடுத்த மே தின அழைப்புச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அச்செய்தியில் யாழ். மாவட்டத்தில் மட்டும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கல்வி வழிகாட்டுனர்கள் நிறைந்துள்ளனர் இவர்களது ஒ[…] குரல் அளப்பரிய சக்தி[…] தது. விழித்தெழுந்த […] உலகமானது அரசின் […] வேடத்திரையினை நி[…] கிழித்தெறிந்து அம்பல[…] தும்உறுதிக்கரங்கள் ஓங்கி[…] ரும் சுதந்திரப்பசுமை ந[…] தொழிலாளர்களுடன் க[…] பணியாளரின் உணர்வுக[…] களும் மே தினத்தின் பே[…] இணைந்து உரம்பெறவே[…] டும்.

இதன் மூலம் அடிமைத்த[…] ங்களுக்கு சமாதி எழுப்பி […] ங்கும் சமூகத்தை விழிப்பு[…] யச் செய்ய உறுதி பூணுவோம்.

மேலும் ஊர்வலத்திலும் எழுச்சிக் கூட்டத்திலும் […] கள் பலத்தினை ஒன்[…] டுவோம் என தெரிவி[…] டுள்ளது.

# மேதின ஊர்வலத்திற்[…] முன்னோடி நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் மே தின ஊர்வலம் பற்றியும பொதுக் கூட்டம் பற்றியும் முன்னோடி நிகழ்ச்சி ஒன்றினை யாழ்பாணத்தின் பல முக்கிய இடங்களில் நடாத்தினர்.

இந்நிகழ்ச்சி மருதனாமடத்தில் இருந்து யாழ் பல்கலைக் கழகம் வரை நடை பெறும் பேரணியிலும் பல்கலைக்கழகத்தில் நடைபெறும பொதுக் கூட்டத்திலும் அனைத்து தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளும்படி நிகழ[…] அழைத்திருந்தது

## மேநாள் ஏற்பாடுகள்

மே நாளன்று […] தில் செல்லும் மக்களின் […] கருதி தேநீர் கடைகள், […] சக்கர வண்டி திருத்தும் […] கள் என்பன திறந்து […] கப் படலாம் எனவும் முத[…] தவிச் சேவை வழங்கப்படுமெ[…] னவும் தெரிவிக்கப்பட்டுள்[…]

ஊர்வலம் செல்லும் பா[…] களில் தாக சாந்தி […] ஏற்பாடுகள் செய்யப்ப[…] துடன். துவிச் சக்கர […] களை பாதுகாப்பாக நி[…] வைக்கவும் ஏற்பாடு செ[…] பட்டுள்ளது.

கொக்குவில் இந்துக் […] லூரி மைதானம், தொ[…] நுட்பக்கல்லூரி மைதா[…] திருநெல்வேலி சந்தைப்[…] திருநெல்வேலி சிவன்[…] வீதி என்பன துவிச்சக்[…] களின் பாதுகாப்பிற்க[…] க்கப்பட்டுள்ளது.

மேலும் கோப்பாய்[…] லும் வாகனங்கள் […] வீதியிலும் தீவ[…] ளுக்கான வாகனங்[…] பல்கலைக் கழக […] திலும், தென்மராட்[…] வுக்கான வாகனங்க[…] நெல்வேலி சிவன்கோ[…] யிலும், வடமராட்சிப்[…] கான வாகனங்கள்மருத[…] கல்லூரி முன் வீதியிலும் […] காமம் பிரிவுக்கான வா[…] ங்கள்நாச்சிமார் கோவிலடி[…] லும் நிறுத்தி வைக்கப்படுமெ[…] னவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மே தினத்தை[…] முன்னிட்டு[…] விடுமுறை

(யாழ்ப்பாணம்)

மே தின ஊர்வலத்தில் […] சிகை அலங்கரிப்பாள[…] கலந்து கொள்வதற்கு […] யாக வடபிராந்தியத்தி[…] அனைத்து சிகை அலங்[…] நிலையங்களையும், அன்[…] தினம் மூடும்படியும், நண்[…] பன்னிரெண்டு மணிக்கு […] பாக சங்க அலுவலக[…] கூடும்படியும், வடபிராந்[…] சிகை அலங்கரிப்பாளர் ச[…] களின் சமாசம் கேட்[…] கொண்டது.

## ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் கு[…] னால் நடாத்தப்பட்டு[…] உதைபந்தாட்டச் சுற்[…] போட்டியில் இன்று யாழ். […] கலைக்கழக மருத்துவ[…] மைதானத்தில் நடைபெற[…] விருந்த பாஷையூர் செ[…] அன்ரனிஸ் மற்றும் யாழ்[…] பாரதி அணிகளுக்கிடை[…] யிலான உதைபந்தாட்ட[…] போட்டி எதிர்வரும் [3 5. 9[…] ஞாயிற்றுக்கிழமை பிற்[…] 3. 30 மணிக்கு பிற்போ[…] பட்டுள்ளது.

## 4ராணுவ

அதிரடித் தாக்குதல்கள் 7 நிமிடங்கள் வரையுமே நீடித்தது. இத்தாக்குதலில் நான்கு காவலரண்கள் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது. இதேவேளை இக் காவலரண்களில் இருந்த 10 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொவ்லப்பட்டனர். பலர் படுகாயத்துடன் முகாமிற்கு ஓடி விட்டனர்.

## புலிகள்

நடைபெறும் இவ் உக்கிர சண்டையில் இராணுவத்தினருக்கு உதவியாக விமானப் படையின் அவ்ரோ விமானங்களும், உலங்கு வானூர்திகளும் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

## மேதின ஊர்வலத்தில் பங்கேற்க அழைப்பு

மாபெரும் மே தின ஊர்வலத்தில் பங்கேற்க கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் அனைவரையும் கல்லூரியில் பிற்பகல் ஒரு மணிக்கு முன்பாக ஒன்று சேருமாறு மாணவர் அவை வேண்டுகோள் வீடுத்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.